# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 07.07.2026**

**முன்னிலை**

**திரு. அபய் குமார் சிங் இ.கா.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 2060/F/2023**

திரு.கு.பாலதண்டபாணி -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத்தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
கழகம் (கோவை) லிட்.,
எண்.37, மேட்டுபாளையம் சாலை,
கோவை - 641 043. -- பொது அதிகார அமைப்பு

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீதான நேரடி விசாரணை 25.05.2026 அன்று மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை தொடர்ந்து, பொது அதிகார அமைப்பின் சார்பாக தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் திருமதி.பா.ராஜேஸ்வரி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) லிட்., கோவை மாவட்டம் அவர்கள் இன்று (07.07.2026) ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி அப்போதைய மேல் முறையீட்டு அலுவலர் அவர்களின் எழுத்து மூல விளக்கத்தினையும் மற்றும் மனுதாரர் கோரிய தகவல்களை பார்வை எண்.8161/SA2060/த1/C862/தஅஉ.ச.தஅபோக(கோ)/26, 18.06.2026 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்து அத்தகவலின் நகல்கள் மற்றும் அனுப்பப்பட்ட ஒப்புகை அட்டையின் நகல்கள் ஆகியவற்றை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இவ்வாணையம் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள்

மற்றும் ஒப்புகை அட்டையின் நகல்களை உறுதி செய்தும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் அவர்களின் எழுத்து மூல விளக்கத்தினையும் ஏற்று இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண். SA 20108/F/2023**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

1. **பொதுத் தகவல் அலுவலர் /**
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
கழகம், (கோவை) லிட்.,
எண்.37, மேட்டுபாளையம் சாலை,
கோவை - 641 043.

2. **அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர்,**
நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
கழகம் (கோவை) லிட்., கோவை மாவட்டம்.
**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வழியாக)**

**மனுதாரர்**

திரு.கு.பாலதண்டாபணி,
எண்.180/215, காந்திபுரம்,
தாராபுரம், திருப்பூர் - 638 656.

**நகல்**

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை - 35 (For follow up)

Copy to file: RV/-PA